# கி.வா.ஜகநாதன் சிறுகதையில் பெண் பாத்திரப் படைப்புகள்.

பேராசிரியர்.சு.சோமசுந்தரம்

உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை, அன்னைகலை மற்றும் அறிவியல் கல்லூரி, கும்பகோணம்.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் சிறுகதை தனி இடம் பெற்றிருக்கிறது. குறைந்தநேரத்தில் படித்து அதன் முடிவை அறியும் நோக்கில் எழுதப்பட்ட இலக்கியம் சிறுகதையாகும்.மனிதன் அவன் மன வோட்டத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளையும் வாழ்க்கையில் நடக்கும் பிரச்சனைகளையும்தான் படைக்கும் சிறுகதையில் கதாப்பாத்திரங்களாகப் படைத்துவிடுகிறான். சிறுகதைகள் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடியசிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது.

சிறுகதை இலக்கியத்தில் பெரும் வெற்றிவாகை சூடியவர் கி.வா.ஜ. சமுதாயத்தில் புறக்கணிக்கபட்ட மனிதர்களையும், வறுமைகொடுமையால் வாடும் மக்களையும், சாதிக் கொடுமையால் நிகழும் போராட்டங்களையும், உயிர்களிடம் அன்புசெலுத்தாத மனிதர்களையும், குடும்ப உறவுசிக்கல்களையும், அண்ணன் தங்கைபாசப் போராட்டங்களையும் கதைக் கருவாகக் கொண்டு பல்வேறு கோணங்களில் தம் சிறுகதைகளில் படைத்திருக்கிறார்.

### கி.வா.ஜகநாதன் வாழ்வும் வரலாறும் :

கி.வா.ஜகநாதன் திருச்சி மாவட்டம் கிருஷ்ணராயபுரம் என்னும் ஊரில் வாசுதேவஜயருக்கும், பார்வதி அம்மாளுக்கும் மகனாக 1906 ஆம் ஆண்டு பிறந்தார். திருமுருகாற்றுப்படைஅரசு,வாகீசகலாநிதி, தமிழ்க் கவி பூஷணம், திருநெறித்தவமணி என்று பல்வேறு பட்டங்களைப் பெற்ற இலக்கியவாதி. முற்போக்கு சிந்தனைவாதி. தான் எழுதிய ஒவ்வெரு சிறுகதையிலும் சமூக உணர்வுமேம்படும் வகையில் சிறுகதைகளைப் படைத்திருக்கிறார். சாகித்ய அகாடமி விருது பெற்றவர். இவர் எழுதிய வளைச்செட்டி என்னும் சிறுகதைத் தொகுதியில் பெண் பாத்திரப் படைப்புகள் என்ற தலைப்பில் கீழ்க்காணும் கட்டுரையைக் காண்போம். **வளைச்செட்டி** என்ற சிறுகதைத் தொகுப்பில் **புதுமலர்ச்சி** என்ற சிறுகதையில் பெண்பாத்திரங்களில் **பவானி** என்ற கதாப்பாத்திரம் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். குழந்தைகள் எல்லாம் பவானியை "சின்னவாத்தியாரம்மா" என்று அழைப்பார்கள். அவள் தனியாக வசித்து வந்தாள். நடுத்தர குடும்பத்தில் பிறந்தவள். எட்டாம் வகுப்புவரையில் படித்தவள். கல்யாண வயது வந்தவுடன் அவள் தகப்பனார் அதிகமாகபணம் செலவு செய்துபி.ஏ, படித்த பையனுக்கு திருமணம் செய்துவைத்தார். திருமணமான நல்லநேரம் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக வேலை கிடைத்துவிட்டது. பேராசிரியர் எனபதால் எப்பொழுதும் படித்துக் கொண்டே இருப்பார். பவானி கணவனரிடம் ஒருவருடம் வாழ்ந்தாள். பேராசிரியர் வீட்டில் விட முழுவதும் புத்தகமயம். அவற்றை ஒழுங்காக அடுக்கி வைப்பதற்கே இரண்டாளுக்கு வேலை சரியாக இருக்கும். பேராசிரியர் தங்கை கல்யாணியும், பவானியும் நெருங்கிப் பழகினார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்தனர்.

பவானிக்கும் அவள் கணவருக்கும் இருந்த நெருக்கம் தளரத் தொடங்கியது. பேராசிரியர் எதற்கெடுத்தாலும் சண்டைபோடத் தொடங்கினார். பேராசிரியர். ஒருநாள் கல்லூரியை விட்டு மூன்றரை மணிக்கே வீட்டிற்கு வந்துவிட்டார். வந்தவுடன் தங்கை கொடுத்த காப்பியை குடித்துவிட்டுப் புத்ததகக் குவியலிடையேமறைந்தார். ஏதோபுத்தகம் தேடினார். கல்யாணியும் தேடினாள் கிடைக்கவில்லை. புவானி தலையணையாக புத்தகத்தை வைத்துப் படுத்திருந்தாள். துலையணையாக வைத்திருந்த புத்தகத்தைப் பேராசிரியர் பார்த்தார். அப்புத்தகத்தைத்தான் தேடினார். படிக்கும் புத்தகத்தை தலையணையாக வைத்துப் படுத்திருந்ததால் பேராசிரியருக்கு கோபம் வந்தது. பேராசிரியர் வெளிப்படையாக கோபத்தைக் காட்டிக் கொள்ளாமல் பவானியின் தகப்பனாரிடம் பவானியை வந்து அழைத்துக் கொண்டு போகும்படி கடிதம் எழுதினார். பவானிதன் வீட்டிற்குச் சென்று விட்டாள். படித்திருந்தும் புத்தகத்திற்கு உரிய மதிப்பளிக்கவில்லை என்றகருத்தை பவானி என்ற கதாப்பாத்திரத்தின் மூலமாககி.வா.ஜ. பதியவைக்கிறார்.

### கல்யாணி

கல்யாணிதன் கணவரை இழந்தவள். ஆதலால் தன் அண்ணனுடன் வாழ்நாளை கழித்துவந்தாள். தன் அண்ணன் கல்யாணி மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். அண்ணனுக்குஉதவியாக எது வேண்டுமானாலும் செய்பவள். அண்ணனுக்கு உதவியாக புத்தகங்களை அடுக்கி வைப்பது. காப்பிபோட்டுக் கொடுப்பது, சமையல் செய்வது, போன்ற பல்வேறு கடமைகளைச் செய்துவந்தாள். "என்னைப் படிக்காதமுட்டாள் என்று அவர் அடிக்கடிசொல்கிறார்"என்று பவானி தன் மைத்துனியிடம்

சொல்லிவருந்துவாள். “ஆமாம் அவருக்கு என்ன வேலை? எல்லோரும் படித்ததுப் பேராசிரியர் ஆகிவிட்டால் பிறகு குடும்பம் நடத்தயார் வருவார்கள்,என்று கல்யாணி சமாதானம் சொல்வாள்.

எனக்கே இந்த வாழ்வு வெறுத்துப்போய் விட்டது. உடம்பும் சரியாக இல்லை. அடிக்கடி மயக்கம் வருகிறது. அண்ணாவிடம் உன்னை அழைத்துக் கொண்டு வந்துவிடும்படி எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறேன். என்னால் ஒன்றும் வேலை செய்யமுடியவில்லை என்று அண்ணனிடம் சொல்கிறேன். அதற்கு அண்ணன் அந்த சனியனைப் பற்றிப் பேசாதே உன்னால் ஆகாவிட்டால் ஒரு வேலைக்காரியைப் போட்டுவிடுகிறேன். நீ ஓய்வு எடுத்துக்கொள் என்கிறார். கல்யாணி தன் உயிரைக் கொடுத்தாவது மைத்துனியை இங்கே கொண்டு வந்து விடவேண்டுமென்று ஆசைப்பட்டாள். இவள் ஆசை நிறைவேறுமா? என்று பாவானிக்கு கடிதம் எழுதுகிறாள். பிறகுகல்யாணி இறந்துவிடுகிறாள். கல்யாணியின் இறப்பு பவானிக்கு தாங்க முடியாத துன்பத்தைத் தந்தது. கல்யாணிதன் கணவனை இழந்து நிற்கும் போது அண்ணன் செய்த உதவிகள் எண்ணற்றவை. ஆனால் கல்யாணின் வாழ்வும் நிம்மதி இல்லாமல் இருக்கிறது. அண்ணன் மனைவியைவிட்டுப் பிரிந்து இருப்பதால் அவருடைய வாழ்வும் நிம்மதி இல்லாமல் இருக்கிறது. அண்ணனுடைய வாழ்விற்குதான் இடையூராக இருப்பதாக எண்ணிக் கொண்டு, தன் வாழ்வை முடித்துக் கொண்டாள். அண்ணனும் மன்னியும் சேர்ந்து வாழவேண்டும் என்பதற்காக தன் வாழ்க்கையைத் தியாகம் செய்வதாக கல்யாணி என்ற கதாப்பாத்திரத்தைப் படைத்திருக்கிறார்.

தத்துவப் பேராசிரியரின் தங்க கல்யாணி இறந்தவுடன் பதினைந்து நாட்களிலேயே பைத்தியம் பிடித்துவிட்டதுபோல் ஆகிவிட்டது. “படிப்புத ் தெரியுமே அன்றி வாழத் தெரியதவர்” இவர், என்று தன் தங்கையே சொல்லியிருப்பது தத்துவப் பேராசிரியராக இருந்தாலும் குடும்பத்தில் விட்டுக் கொடுக்கும் பண்பு இல்லாததால் கணவன் மனைவி இடையே பிரச்சனை ஏற்பட்டது. இதனால் கல்யாணிதன் உயிரைவிடுகிறாள். கல்யாணி போன்ற பலகதாப்பாத்திரங்கள் சமூகத்தில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

**குழந்தை சந்திராபாத்திரப் படைப்பு**

**விடுதலை உண்டோ?** என்ற சிறுகதையில் **குழந்தை சந்திரா** என்ற கதாப்பாத்திரம் பற்றிக் காண்போம். குழந்தை சந்திரா கோகிலா வீட்டிற்கு தன் அம்மாவுடன் சென்றாள். கோகிலாவின் அக்காவிற்கு ஒரு குழந்தை. கோகிலாவின் அத்திம் பேர் கல்கத்தாவில் வேலைசெய்துவருகிறார். இந்தக் குழந்தையை இவளிடம் விட்டுவைத்திருக்கிறார். “அதுவிசமம் செய்கிறதாம். அன்றுநான் அந்தவீட்டிற்குப் போயிருந்தேன் சந்திராவும் வந்திருந்தாள். அந்தக் குழந்தையைக் கட்டிப் போட்டிருந்தார்கள். அதைப் பார்த்தநாள் முதல் இவள் அங்களாய்த்துப்புலம்புகிறாள்”.

சந்திராசாந்தாவைப் பார்த்ததிலிருந்துஅவள் எண்ணம் அவளைவிட்டுப் போகவில்லை. இவள் ஏதேனும் தின்பண்டம் சாப்பிட்டால் உடனே இவளுக்கு கொடுத்து விட்டுச் சாப்பிடவேண்டும் என்று நினைப்பவள்.

ஒருமுறை பாட்டி கதை சொன்னாள். அப்பொழுது “கிளியைக் கூண்டில் அடைப்பது,வாயில்லா ஜீவனை வதைப்பவர்கள், வீணாக ஒருவனைக் கட்டிப் போடுபவர்கள் இவர்களை எல்லாம் பகவான் தண்டனைக்கு உள்ளாக்குவார்”என்று சொன்னாள். அதற்கு சந்திரா “பாட்டி சாந்தாவை அவள் சித்தி கட்டிப் போடுகிறாள். நீபோய் சொல்லுசாமி கண்ணைக் குத்திவிடும் என்று சொல்லு”என்றாள்.

பாட்டி,“சாந்தாவுக்கு எங்கள் அம்மாவே அம்மாவாகவே இருக்கட்டும்” என்று சந்திரா கூறினாள். அந்த அளவிற்கு சாந்தாவை கட்டிப் போட்டிருப்பது மனதில் ஆழமாக பதிந்து பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

**சந்திராவின் புலம்பல்**

சாந்தாவைநினைக்கும் போதெல்லாம் அவள் உள்ளத்திலே ஒருவேதனை உண்டாகும். அவளுக்குமாத்திரம் சக்தி இருந்தாள் சாந்தாவை அப்படியே தூக்கிக் கொண்டுவந்து தன் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பாள். நானேஅம்மாவாக இருக்கலாம் என்றுநினைக்கிறாள்.

சாந்தாவை ஏன் சித்திகட்டிப் போடுகிறாள்? என்னை அம்மா கட்டிப்போடவில்லை. சில சமயங்களில் அடிக்கிறாள். ஆனால் கட்டிப் போடுவதில்லையே கட்டிப் போட்டால் எப்படி இருக்கும்.? கஷ்டமாக இருக்கும்! கால் காப்பிலே கட்டிப் போடுகிறார்கள், சாந்தாவை. என்னையும் கட்டிப் போடச் சொல்லிபார்க்கிறேன் என்று புலம்புகிறாள். சாந்தாவிடம் ஆதரவுகாட்டும் ஆத்மா இந்த

சாந்தா மட்டுமே. இரண்டு குழந்தைகளும் கொஞ்சநேரம் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அப்போது இரண்டு பேரும் இந்த உலகத்தையே மறந்துபோய் விளையாடுவார்கள்.

ஒருநாள் தன் அண்ணன் கயிற்றைநறுக்கும் காரியத்தை எப்படி செய்கிறான் என்பதை கவனித்துக் கொண்டிருந்தாள். பின் அந்தக் கயிற்றை இரண்டு மூன்று துண்டுகளாக வெட்டினான். அவன் தங்கை சந்திரா மிகவும் கூர்மையாக கவனித்துக் கொண்டே இருந்தாள்.

**சந்திரா செய்த யோசனை.**

சந்திரா குழந்தை மனதில் யோசனை செய்தாள். அண்ணன் விளையாடப் போயிருந்தான். பெட்டியைத் திறந்து கத்தியை எடுத்துக் கொண்டாள். அடிமேல் அடிவைத்து வெளியில் வந்தாள். திருடனைப் போலபயந்து கொண்டு நடந்தாள். சாந்தாவின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள். வீட்டுக்குள்ளே நுழைந்தாள். கூடத்துக்குள் வந்தாள். குழந்தையைக் கண்டவுடன் “சாந்தா” என்று மழலைச் சொல்லால் அழைத்தாள்.

**சந்திராவின் துணிச்சல்.**

அவள் காலைப் பிடித்தாள். கயிற்றைக் கண்டாள், நினைத்த காரியம் கயிற்றை அறுக்க முயற்சி செய்தாள்.

“கீச் என்ற சத்தம் சாந்தாவீல் வீல் என்று கதறத் தொடங்கிவிட்டாள். அவள் காலில் கத்திக்காயம். கயிறு அறுபடவில்லை, காலில் காயம் பட்டவிட்டது. சந்திராவும் அழ ஆரம்பித்துவிட்டாள்.

இந்தக் கூக்குரலைக் கேட்டு சித்தி ஓடிவந்தாள். அவள் கண்டது,என்ன? சாந்தாவின் காலிலேகத்திக் காயம். பக்கத்திலேகத்தி. “சந்திரா! அடிப்பாவி! “என்று ஓடிவந்து சந்திராவின் முதுகில் ஓங்கி அடித்தாள் சித்தி. சந்திரா கதிகலங்கிப் போனாள். அவள் நினைத்ததுஎன்ன? நடந்ததுஎன்ன? சாந்தாவுக்கு என்றேனும் விடுதலை உண்டோ?” என்று குழந்தையின் காலில் போட்ட கட்டை எப்படியாவது அவிழ்த்து விடவேண்டும் என்ற நோக்கோடு சந்திரா கதாப் பாத்திரத்தின் மூலமாக எடுத்துக் காட்டியுள்ளார். அதோடு மட்டுமல்லாமல் பெண்களுக்கு போடப்பட்டுள்ள கால்கட்டாகவே இதனைப் பார்க்க வேண்டும்.

**பெண் விடுதலை**

பெண்களுக்கு சுதந்திரமாக வாழ வழி வகை செய்ய வேண்டும் என்ற நோக்கோடு பெண்களுக்கான விடுதலையை பெண்ணே ஏற்படுத்தித் தருவதுபோல் சந்திரா கதாப்பத்திரத்தை படைத்துள்ளார். இக்கதைபெண்ணுக்கு கிடைத்த விடுதலையாகவே பார்க்கவேண்டும்.